**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*******

**ஊடக அறிக்கை**

**5 ஆவது சர்வதேச யோக தினம் கொழும்பில் ஜூன் 15 ஆம் திகதி அனுசரிக்கப்படும்**

ஒவ்வொரு வருடமும் ஜூன் 21 ஆம் திகதியை 'சர்வதேச யோகா தினமாக' அனுசரித்து பிரகடனப்படுத்துவதற்கு இந்தியாவினால் முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக் கொண்டது. இத்தீர்மானத்தின் முதல் இணை அனுசரனையாளர்களில் ஒன்றாக இலங்கையுடன், 170 இற்கும் மேற்பட்ட நாடுகளால் தீர்மானம் ஆதரவளிக்கப்பட்டது. ஆயுர்வேதத்தைப் போன்று யோகா, இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் பகிர்ந்து கொள்ளும் ஒரு பாரம்பரியத்தின் ஓர் அங்கமாக அமைகிறது. 2015 இலிருந்து, சர்வதேச யோகா தினம் ஆயிரத்திற்கு மேற்பட்ட யோகா ஆர்வங் கொண்டவர்களின் பங்குபற்றுதலுடன் நாடு முழுவதிலுமாக இலங்கையில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வருடம், **5** ஆவது சர்வதேச யோகா தினத்தை அனுசரிப்பதற்கு, கொழும்பு சுதந்திர சதுக்கப் பூங்காவில் ஜூன் **15** ஆம் திகதி, சனிக்கிழமை, காலை **6** மணியிலிருந்து ஒரு மாபெரும் யோகா பொது நிகழ்வு நடைபெறும்.

இலங்கை அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சு, டாடா மோட்டார்ஸ் மற்றும் ஸ்வாமி விவேகானந்த கலாச்சார நிலையம், இராம கிருஷ்ண மிஷன், அஷ்டாங்கா யோகா மந்திர், செத்சட யோகா, ஹத்த யோகா நிலையம், கிரியா பாபாஜி யோகா ஆரண்யம், தமய யோகா, மனித மேம்பாட்டு நிலையம், பிரம்ம குமாரி ராஜ யோகா நிலையம், வாழும் கலை, எனது யோகா மையம், சக்தி ஆனந் யோகாப் பாடசாலை (மட்டக்களப்பு), ஆதி யோகம், ஆரோக்ய அனஹட்ட யோகா, சம்ஸ்குருத்தி பதஞ்சலி யோகா நிலையம் மற்றும் ரித்மிக் யோகா ஆகியன இந்த மாபெரும் நிகழ்வின் பங்குதாரர்களாவர்.

யோகா, பிரணயாமம், மற்றும் தியானம் என்பவற்றின் ஒரு மீள்யெவனப்படுத்தும் இந்த நிகழ்வுக்கு அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். நிகழ்விற்கு அனுமதி இலவசம். தயவு செய்து யோகா பாய்களை (Yoga Mats) உங்களுடன் எடுத்து வரவும். அனைவருக்கும் பங்குபற்றுதலுக்கான சான்றிதழ் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் வழங்கப்படும். iccrcolombo2@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் தயவு செய்து உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து ஸ்வாமி விவேகானந்த கலாச்சார நிலையத்தை **2684698** எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவம்.

* * * * *

கொழும்பு

ஜூன், **11, 2019**